1981 ஜனவரி 23]

திற்கு ஒரு விதி முறையை அணுகுவதற்கில்லை. ஏனென்றால், முகவை மாவட்டத்திலேயே சில இடங்களில் நல்ல விளைச்சல் உண்டு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கிற பகுதியை எடுத்துக் கொண்டால் கூட, அதிலும் சில பகுதிகளில் தணணீர் வசதி உண்டு. அதிகமாக விவசாயம் செய்யக் கூடிய, விளையக் கூடிய பகுதிகளும் உண்டு. அதேமாதிரி தண்ணீர் கிடைக்கா மல்பஞ்சத்தினால் அதிகமாக பாதிக்கப்பட்டபகுதியும் இருக்கிறது. துல்லியமாக வருகிறபோது, இதை வட்ட ரீதியாக கூடக் கணக்கு எடுத்து, தண்ணீர் கிடைக்கும் வறட்சிப் பகுதி என்றுகூட பிரித்து கணக்கெடுக்க வேண்டியிருக்கிறது. அதனால்தான் நான் ஏற்கனவே சொன்னேன் ஒட்டுமொத்தமாக, ஆழமாக ஆய்ந்து முடிவெடுக்க வேண்டும் என்று சொன்னேன். அப்படி ஒரு அணுகுமுறையை, நான் கூறிய அடிப்படையில் கொண்டு வர அரசு வழி முறைகளை ஆராய்ந்துக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் கடைபிடிக்கப்படும்.

ஒரத்தநாட்டில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம்

*வினா எண். 7—திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாட்டில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதி மன்றம் ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

திரு. ந. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்த நாட்டில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் இல்லாததினால் பட்டுக்கோட்டைக்கு, 25 மைலுக்கு அப்பால் வந்து, இந்த இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஒரத்தநாட்டு மக்களுக்கு இருக்கிறது. அந்த மக்கள் மிக ஏழையாக இருப்பதினால் அவர்களுக்கு வேண்டிய வசதியை செய்து தரவேண்டும். அதனால் மீண்டும் இதனை அரசு மறுபரிசீலனை செய்து, ஒரத்த நாட்டில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றத்தை ஏற்படுத்த அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1970 ல் அமைக்கப்பட்ட நீதி மன்றங்களின் அதிகார வரம்பு குறித்து "Committee on Jurisdiction of Courts" என்ற குழு ஒரத்த நாட்டில் இப்படிப்பட்ட அமைப்பைக் கொண்டு வருவதற்கான பரிந்துரையைச் செய்யவில்லை. அதன் காரணமாகத்தான் இது நடைமுறைபடுத்தப்படவில்லை.

[முற்பகல் 9–40]

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, 1970 ம் ஆண்டு எந்தெந்த இடங்களில் கோர்ட்டு இருக்க வேண்டுமென்று அந்தக் குழு அமைத்து அது ஆய்வு செய்ததற்குப் பின்னால் தஞ்சையிலிருந்து அறந்தாங்கி தாலுகா பிரிக்கப்பட்டு விட்டது. மன்னார்குடியிலுள்ள குற்றவியல் நீதிமன்றம் பட்டுக்கோட்டைக்குப்போக வேண்டுமென்று அந்தக் கமிட்டி சிபார்சு செய்தது. அந்த சிபார்சுக்குப் பிறகு, அறந்தாங்கி தாலுகா தஞ்சை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட பிறகு மீண்டும் அதே நடைமுறையை ஹைகோர்ட் நடைமுறைப்படுத்த முயற்சிப்பது அரசுக்குத் தெரியுமா? அதைத் தடுத்து நிறுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மூலக் கேள்வி வேறு, உறுப்பினர் அவர்கள் கேட்கக்கூடிய கேள்வி வேறு. இருந்த போதிலும் சொல்கிறேன். பட்டுக்கோட்டையிலிருந்து அறந்தாங்கி ஏற்கனவே பிரிக்கப்பட்டு விட்டதால் அதன் ஜூரிஸ்டிக்ஷன் குறைந்துவிட்டது. ஒரத்தநாட்டுக்குத் தலைமை இடத்தைக் கொண்டு வரும்போது பட்டுக்கோட்டை ஜூரிஸ்டிக்ஷன் குறுகலாகிவிடும் என்பதால் உறுப்பினர் அவர்கள் முன்னால் எழுப்பிய அந்தக் கோரிக்கையை அரசாங்கம் தற்போது ஏற்கமுடியாத நிலையில் இருக்கிறது.

THIRU J. HEMACHANDRAN: Speaker Sir, May I know what is the criterion evolved by the Government in establishing the First Class Magistrate Court? and the Second—Class Magistrate Cour.

MR. SPEAKER: This is a general question.

விசைத்தறி தொழிலாளர் நலன் பாதுகாப்புச் சட்டம்.

* வினா எண். 8—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) பவர் லூம் தொழிலாளர்களின் நலனை பாதுகாக்க சட்டம் இயற்றும் ஆலோசனை ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) இல்லை.